# தனிநாயகம் அடிகளார் - ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

சேவியர் தனிநாயகம் அடிகள் (ஆகஸ்ட் 2, 1913 - செப்டம்பர் 1, 1980) ஈழத்துத் தமிழறிஞர், கல்வியாளர், இதழாளர், ஆய்வாளர், ஆன்மீகவாதி, தமிழ்த்தூதர். உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடைபெற காரணமானவர். தமிழ் இலக்கண, இலக்கியங்களோடு தமிழரின் கலைகள், வாணிகத்தொடர்புகள், வாழ்க்கை நிலை, உளவியல், அயல் நாட்டுத்தொடர்புகள் போன்றவையும் ஆராயப்பட வேண்டும் என தமிழ் ஆராய்ச்சியில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர். தமிழ் ஆராய்ச்சி தமிழில் மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும் பதிவாக வேண்டுமென வலியுறுத்தினார். ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்து பதிப்பித்தார்.

இவ்வாறு தமிழ் மீது மட்டட்டற்ற மரியாதையும் அக்கறையும் உடைய சேவியர் தனிநாயகம் அவர்களது வாழ்க்கை வரலாறு மற்றும் அதுசார் அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தல் அவசியம் ஆகும்.

### செயற்றிட்ட நோக்கம்

இச்செயற்றிட்டம் மூலம் சேவியர் தனிநாயகம் அடிகள் அவர்கள் ஆற்றிய பணிகள் அவர் பணிபுரிந்த இடங்கள், தமிழ்த்துறைக்கு கிடைத்த அடையாளங்கள் மற்றும் அபிவிருத்திகள் , அவரது ஆக்கங்கள் மற்றும் கையெழுத்துப்பிரதிகள் ஆகியவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தலுடன் அவருடன் தொடர்புபட்ட நபர்களை இனங்கண்டு அவர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல் .

## எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

- சேவியர் தனிநாயகம் அடிகள் அவர்களது படைப்புக்களை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்
- சேவியர் தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்துறை சார் அறிவு மற்றும் அத்துறை சார் விடயங்களை ஆவணப்படுத்தல்
- சேவியர் தனிநாயகம் அடிகள் மற்றும் அவரது பொறியியற் துறை சார் நபர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல்.
- மேற்கூறிய செயற்பாடுகளை பூரணப்படுத்துவதன் மூலம் சேவியர் தனிநாயகம் அடிகள் சார் அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்படும்.

## செயற்றிட்ட காலம்

ஒரு வருட காலப்பகுதிக்குள் சேவியர் தனிநாயகம் அடிகள் அவர்களது படைப்புக்கள் அவரது ஆக்கங்கள் அவரது சமூகப்பணி குறித்த விடயங்கள் மேலும் அவரது வரலாற்றோடு தொடர்புபட்ட அவரது பணிகளை இன்று வரை எடுத்துச் சென்றுகொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**